
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் 73 | 03.06.2023 (சனிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு ரூ.30.00

# சென்னை நோக்கி புறப்பட்ட கடுகதி ரயில் கோர விபத்து 300 க்கும் மேற்பட்டோர் காயம் : பலர் உயிரிழந்திருக்கலாமென அச்சம்



கொல்கத்தாவிலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட கோரமண்டல் கடுகதி ரயில் விபத்திற்குள்ளானதில் 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கொல்கத்தாவில் இருந்து சென்னை நோக்கி புறப்பட்ட கோரமண்டல் கடுகதி ரயில் இன்று (2) இரவு சுமார் 7 மணியளவில் ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டம் பஹானாகா ரெயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்தபோது, பெங்களூருவில் இருந்து கொல்கத்தா சென்ற ரெயில் தடம் புரண்ட பெட்டிகள் மீது மோதி விபத்துள்ளானது.

இந்த விபத்தில் பல பெட்டிகள் தடம் புரண்டன. இதனால் 300க்கும் மேற்பட்ட பயணிகள் கயமடைந்தனர். இந்த விபத்தில் பலர் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படகின்றது.

மீட்புக் குழு விபத்து நடைபெற்ற இடத்திற்கு சென்றடைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

3ம் பக்கம்

# கஜேந்திரகுமார் எம்.பி.யை ஹெல்மெட்டினால் தாக்கி, துப்பாக்கியால் சுடுவதற்கு முயற்சி மருதங்கேணியில் நடந்த பரபரப்பு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று வெள்ளிக்கிழமை மருதங்கேணியில் தாக்கப்பட்டார். அவரை அடித்தார் என்று கூறப்படும் அரச புலனாய்வாளர் தப்பிச் சென்று தலைமறைவாகினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான முரண்பாடுகளின்போது கஜேந்திரகுமாரைப் பொலிஸ் புலனாய்வாளர் என்று அடையாளப்படுத்திக் கொண்ட நபர் ஒருவர் பிஸ்டலைக் காட்டி மிரட்டினார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:- மருதங்கேணியில் உள்ள விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்களைச் சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார். அங்குள்ள மைதானத்தில் இளைஞர்களுடன் அவர் கலந்துரையாடிக் கொண்டிருந்ததை இருவர் தமது அலைபேசியில் காணொளியாகப் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

இதைக் கண்டதும் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆய்வு உதவியாளர் அந்த இருவரிடமும் சென்று, நீங்கள் யார், எதற்காகக் காணொளிப்

3ம் பக்கம்

# பௌத்த மயமாக்கலை தடுக்க இந்தியாவின் இந்து அமைப்புக்களை நாடவிருக்கும் விக்கி



வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சட்டவிரோத பௌத்த மயமாக்கலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இந்தியாவில் உள்ள

3ம் பக்கம்

# பயங்கரவாதத்தை முறியடிக்கும் சட்டங்கள் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையதாக அமைய வேண்டும் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தல்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்களை உள்ளடக்கிய கடிதமொன்றை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, பயங்கரவாதத்தை முறியடிக்கும் நோக்கில் புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் கடும் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் எழுந்த நிலையில், அதுபற்றிய கரிசனைகள் மற்றும் திருத்த முன்மொழிவுகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு நிதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொதுமக்கள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்தினர் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரிடமும் கோரிக்கைவிடுத்திருந்தார். அதற்கமைய உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பான தமது கரிசனைகளை உள்ளடக்கி சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்தியப் பிரதிப்பணிப்பாளர் ஸ்மிரிதி சிங்கினால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது. இச்சட்டமூலமானது கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு மனித உரிமைகளின்மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி இச்சட்டமூலம் இலங்கை அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகவும் காணப்படுகின்றது.

3ம் பக்கம்

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் பெரும் ஆபத்து கவலையில் உறவுகள்



அரசாங்கத்தினால் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அது தமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கும் தாய்மார்களுக்கும் பாதகமாக அமையும் எனப் போரினால் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“பயங்கரவாத தடைச் சட்டத்தை இயற்றுவது என்பது, ஜனநாயக போராட்டத்தைச் செய்து வருகின்ற எமக்குப் பாதகமாக அமையும் என்பதாலும், நாம் எமது உரிமைகளைக் கேட்க முடியாது என்பதாலும் இந்த புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் இந்த நாடாளுமன்றத்திலே இதனை நிறைவேற்றக்கூடாது என்பதையும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.”

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகச் சொன்ன அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (ATA) உருவாக்க முயற்சிப்பதாக வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் சிவானந்தன் ஜெனிற்றா சுட்டிக்காட்டியுள்ளார். கூட்டாகவோ அல்லது தனியாகவோ போராடுபவர்களுக்கு இந்த சட்டம் தடையாக அமையுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிந்து அதனை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ச கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இலங்கையின் மிக நீண்ட போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் அரசாங்கம் ஆலோசனை நடத்தியதாகத் தெரியவில்லை.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் மூலம் தொழிற்சங்க உரிமைகள், ஊடக உரிமைகள், போராட்டங்கள் நசுக்கப்படும் என சிலர் கூறி மக்களைத் தவறாக வழிநடத்துவதாக, கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், புதிய சட்டமூலத்தை விமர்சிப்பவர்கள் திருத்தங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை எனக் குற்றம் சுமத்தினார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி 2,291ஆவது நாளான நேற்று முன்தினம் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் தாய்மார்கள், போர்க்குற்ற விசாரணைக்கான உள்நாட்டு பொறிமுறையை நிராகரிப்பதாகவும், சர்வதேச விசாரணையையே கோருவதாகவும் மீண்டும் வலியுறுத்தினர்.

“பயங்கரவாத எதிர்ப்பு” சட்டமூலத்தை உடனடியாக நிறுத்து! புதிய சட்டங்களைத் திணித்து மக்களின் குரலை நசுக்காதே! போன்ற கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்ததாகப் பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். யுத்தத்தின் இறுதி நாட்களில் பாதுகாப்புப் படையினர் பொறுப்பேற்ற பின்னர்,

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு கோரி, 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டங்கள் தற்போது 2,300 நாட்களை நெருங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மூடப்படும் ஐ.நா. அகதிகள் பணியகம்

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகள் பணியகம் மூடப்படும் என்ற தகவல்களையடுத்து, இலங்கையில் அகதிகளாக தங்கியிருப்போர் அச்சமடைந்துள்ளதாக சர்வதேச இணையம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இருக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகள் பொது சுகாதார அமைப்புக்கான அணுகலைக் கொண்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவுடன் ஐக்கிய நாடுகளின் அமைப்பு மாதாந்த வாழ்க்கைக் கொடுப்பனவையும் வழங்குகிறது. உதவித்தொகையின் ஒரு பகுதியாக, அகதிகளின் குழந்தைகள் பள்ளிக் கல்விக்கான நிதியையும் பெறுகிறார்கள்.

இந்தநிலையில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அகதிகள் பணியகத்தின் 2023 நிதித் தேவைகளில் 21வீதம் மட்டுமே இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

2020 நவம்பருக்குள், இலங்கையில் 1,253 அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் இருந்தனர்.

அத்துடன், 2022 டிசம்பரில், இலங்கை கடற்படை மியான்மரில் உள்ள ரக்கைன் மாநிலத்தில் இருந்து இடம்பெயர்ந்த 105 ரோஹிங்கியா மக்களை ஏற்றிச் சென்ற இலங்கைப்படையினர் காப்பாற்றிய நிலையில் அவர்களும் தற்போது இலங்கையில் வசிக்கின்றனர்.

ஆனால் இப்போது, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கையின் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அலுவலகம் மூடப்படும் என்ற வாய்மொழி, அகதிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

# பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது என்கிறார் மைத்திரி

பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ‘பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது. மேலும் மொழிகளும் மதங்களும் வேறுபட்டாலும் ஒவ்வொரு மதங்களையும் மதிக்க மனிதர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். இதன் ஊடாக அரசியல் செய்ய பலரும் முயற்சிக்கிறார்கள். கடந்த காலங்களில் எல்லாம் இதுபோன்ற பல வரலாறுகள் காணப்படுகின்றன.

என்னைப் பொறுத்தவரை மொழி அல்லது மத அடையாளம் கொண்ட அரசியற் கட்சிகளை பதிவு செய்வதை தடைசெய்யும் வகையில் அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே இவ்வாறான வெறுப்புப் பிரசாரங்களின் ஊடாக அரசியல் செய்யும் கலாசாரத்தை நாட்டிலிருந்து இல்லாது செய்ய முடியும்.

அத்துடன் வெறுப்புப் பிரசாரங்களை செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அடிப்படைவாதிகளால் நிதி அனுப்பப்படுகிறது.

இதனைக் கண்டறிந்து முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலனாய்வுப் பிரிவினர் இதனைக் கண்டறிய வேண்டும். நல்லிணக்கம், ஜனநாயகம், மனிதாபிமானத்தை உறுதிப்படுத்தினாலேயே ஒரு நாட்டை முன்னேற்ற முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார்.

## சென்னை நோக்கி...

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விபத்து நிவாரண ரயில் விரைந்துள்ளதாக தென் கிழக்கு ரயில்வே அறிவித்துள்ளது. மேலும், 50 ஆம்புலன்ஸ்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து காயம் அடைந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டுள்ளன. உள்ளூர் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள், கல்லூரிகள் தயார் நிலையில் இருக்கும் வகையில் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். காயம் அடைந்துள்ள பயணிகள் சிகிச்சைக்காக பாலசோர் மெடிக்கல் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 300 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலர் படுகாயத்துடன் சிகிக்கை பெறுகின்றனர். 22 பேர் அடங்கிய தேசிய மீட்புக்குழு சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளது.

எனினும் ரயில் விபத்து பற்றிய முழுமையான தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. வனப்பகுதியில் இந்த விபத்து நடைபெற்று இருப்பதாகவும் இரவு நேரம் என்பதால் கடும் சிரமங்களுக்கு இடையே மீட்பு பணிகள் இடம்பெறுவதாகவும் இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. தேசிய பேரிடர் மீட்புப் படையினர் விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்துள்ளனர்.

## பௌத்த மயமாக்கலை...

இந்து மத அமைப்புக்களின் உதவியை நாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் ஊடகமொன்றுக்கு தெரிவிக்கையில்

இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்களின் உதவியை நாடி, அவர்களுடன் கலந்தாலோசித்து வட-கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய அல்லது சட்டவிரோத பௌத்த மயமாக்கலை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

இதற்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும், உதவியையும் நாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இது தொடர்பான தீர்க்கமான தீர்மானம் இன்னும் எட்டப்படவில்லை என்றும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சீ.வி. விக்னேஸ்வரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கஜேந்திரகுமார் எம்.பி.யை...

பதிவுகளைச் செய்கிறீர்கள் என்று வினவியுள்ளார். தமது விவரங்களை வெளியிட மறுத்த அந்த இருவருக்கும் ஆய்வு உதவியாளருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் கவரப்பட்ட ஏனையவர்கள் அந்த இடத்தில் குழும இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் அவர்கள் தங்களை அரச புலனாய்வாளர்கள் என்று கூறியுள்ளனர். அதனை நிரூபிப்பதற்கு வேண்டிய அடையாள அட்டையைக் காண்பிக்கும்படி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளார். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை.

இதையடுத்து வாய்த்தர்க்கங்கள் இரண்டு தரப்பினருக்கும் இடையில் முற்றிய நிலையில் தம்மைப் புலனாய்வாளர்கள் என்று அடையாளப்படுத்திய இருவரில் ஒருவர் திடீரென நாடாளுமன்ற உறுப்பினரைத் தலைக்கவசத்தால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற மற்றையவர்கள் எஞ்சிய நபரைச் சுற்றிவளைத்துள்ளனர். தாக்கிவிட்டு ஓடிய நபர் அங்கு வரும் வரை அவரை விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர். அந்த நபர் உடனடியாகப் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பெடுத்துப் பேசியுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த பாடசாலையொன்றினுள் இருந்து பொலிஸ் சீருடையிலும் பொலிஸ் சிவிலுடையிலுமாக வந்த இருவர் என்ன, ஏது என்று விசாரித்துள்ளனர். முன்னணியினர் மடக்கி வைத்திருந்த நபர் அரச புலனாய்வாளர் என்று கூறி அவரை விடுவிக்குமாறு இரு பொலிஸாரும் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடியவர் வராமல் அவரை விடுவிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டதும் மோசமான வார்த்தைகளால் இரு பொலிஸாரும் திட்டியுள்ளனர். அப்போது ஒருவர் தன்னிடமிருந்த பிஸ்டலைத் தூக்கி நாடாளுமன்ற உறுப்பினரின் முகத்துக்கு நேரே நீட்டி மடக்கி வைத்திருக்கும் நபரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்தச் சமயத்தில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் அங்கு வருகை தந்தார். ஏ.ஜயதிஸ்ஸ என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். தானே அந்தப் பகுதிக்கான பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி என்றார். அவரும் முன்னணியினர் மடக்கி வைத்திருக்கும் நபர் அரச புலனாய்வாளர் என்றும், அவரை விடுவிக்கும்படியும் வலியுறுத்தினார்.

அந்த இருவரும் இப்படித் தவறாக நடந்துகொண்டதற்காகத் அவர்களுக்குத் தண்டனை இடமாற்றம் வழங்குவார் என்றும், இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டுடன் முடித்துக்கொள்ளலாம் என்றும் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். ஆனால் முன்னணியினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். தாக்கிவிட்டுத் தப்பியோடிய நபரைக் கொண்டு வந்து அடையாளப்படுத்தும் வரைக்கும் மடக்கி வைத்திருந்த நபரை விடுவிக்க முடியாது என்று தெரிவித்தனர்.

இதனால் அங்கு மீண்டும் தர்க்கமான சூழல் எழுந்தது. இதையடுத்து பொலிஸ் நிலையத்துக்கு வந்து இது தொடர்பில் முறைப்பாடு வழங்குமாறும் சப் இன்ஸ்பெக்டர் ஜயதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தின் மூலம் தனது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பேன் என்று கூறிய பின்னர் தடுத்து வைத்திருந்த நபரை விடுவித்து அங்கிருந்து புறப்பாட்டார் கஜேந்திரகுமார்." - என்றனர். சம்பவம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., தான் தாக்கப்பட்டது உண்மை என்று உறுதிப்படுத்தினார்.

அத்துடன் தன்னை நோக்கிப் பிஸ்டல் நீட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். "அருகிலிருந்த பாடாசலையில் இருந்து வந்த இருவர் நாம் தடுத்து வைத்திருந்த நபரை விடுமாறு கோரி மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தினர். அதற்குள், ஒருவர் என்னைத் துப்பாக்கியால் இலக்குவைத்து தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை விடுவிக்குமாறு கோரினார்" - என்று யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவித்தார்.

## பயங்கரவாதத்தை முறியடிக்கும்..

மேலும்இச்சட்டத்தின்கீழ்பயங்கரவாதக்குற்றமாகக் கருதப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் உரியவாறானதும் தெளிவானதுமான வரைவிலக்கணம் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அரச பாதுகாப்பு அதிகாரிகள்வசம் மட்டுமீறிய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இச்சட்டவரைபைத் தயாரித்தவர்கள் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகவும் இதனைத் தயாரிக்கவில்லை.

எனவே சர்வதேச சட்டத்தின்கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டுமெனில் இச்சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். அதன்படி குறிப்பாக உத்தேச பயங்கரவாதச்சட்டமூலத்தில் பயங்கரவாதம் என்ற பதத்துக்கு விரிவான வரைவிலக்கணம் வழங்கப்பட்டிருப்பதுடன் அதன்கீழ் பல்வேறு குற்றங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேபோன்று சந்தேகநபரை குற்றச்சாட்டுக்களின்றி ஒரு வருடகாலம் வரை தடுப்புக்காவலில் வைக்கமுடியும் என்பதுடன் சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக மேல்நீதிமன்றத்தினால் தடுப்புக்காவல் காலத்தை நீடிக்கமுடியும் என்ற சரத்து இச்சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ளது. மேலும் இப்புதிய சட்டமூலத்தின் ஊடாக இராணுவத்தினருக்கு மட்டுமீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி எந்தவொரு நபருக்கோ அல்லது அமைப்புக்கோ எதிராகத் தடைவிதிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவை உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினராலும் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளைக் கருத்திற்கொள்ளுமாறு வலியுறுத்துவதுடன், பயங்கரவாதத்தை முறியடிக்கும் நோக்கில் புதிதாகக் கொண்டுவரப்படக்கூடிய எந்தவொரு சட்டமும் சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
021 222 7557 / +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையில் கதைகள் பேசும் பக்கத்திற்கு சிறந்த புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுகிறது... நீங்கள் எடுத்த சிறந்த படங்களை எங்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் பெயருடன் அனுப்பி வையுங்கள்..**
**+94 76 567 3339**

# “போராளிகளை வைத்து சந்தர்ப்பவாத அரசியலை தமிழ் தேசிய மக்கள் முன்னணி செய்கிறது”



தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னாள் போராளிகளை வைத்து சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொள்வதாக ஜனநாயக போராளிகள் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. தமது அரசியலுக்காக முன்னாள் போராளிகளை குறித்த தரப்பினர் பயன்படுத்துவதாகவும் அந்தக் கட்சியின் செயலாளர் இ. கதிர் கூறியுள்ளார். வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி விமர்சித்த நிலையில் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அரசியல் அணியின் தொடர்ச்சியாக எந்த அணிகளையோ அல்லது தாயகத்தில் இருந்த அரசியல் கட்சிகளையோ தலைமை நியமிக்கவில்லை. அவர்களிடம் எந்தப் பொறுப்புகளும் வழங்கப்படவில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் இயங்குகின்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட ஒரு மாத காலப்பகுதிக்குள்ளேயே தமிழ் தேசிய பரப்பிலிருந்து வெளியேறிச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியென பொய்யான மாயையை மக்கள் மத்தியில் காட்டிக்கொண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்று பொய்யான ஒரு கட்சியை உருவாக்கிக்கொண்டு இன்று தமிழ் தேசிய அரசியல்வாதிகளாக செயற்படுகின்றார்கள்.

ஆனால், இவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. விடுதலைப் புலிகளுடைய வரலாறு என்பது மிகவும் கனதியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்து வந்தவர்கள். அந்த விடயங்களை நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம் என்று அவர்களிடம் நாங்கள் பல தடவைகள் கூறி இருக்கின்றோம். ஆனால் இன்றும் அவர்கள் இந்த விடயத்திலே மீண்டும் மீண்டும் தலையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையிலேயே இந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர் வெளிநாடுகளில் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களை காரணம் காட்டி பல கோடிகளை மோசடி செய்து அதனை போராளிகளுக்கும் மக்களுக்கும் வழங்காது தங்களது சந்தர்ப்பவாத அரசியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியுள்ளனர்.

போராளிகளை விடுதலைப் புலிகளின் தலைவர் கீழ்த்தரமான நிலையில் வளர்க்கவில்லை. தனித்துவமான முறையில் தங்களது பொருளாதார நிலைமையை வளர்த்துக் கொள்வதற்கான அடிப்படைகளையும் தலைவர் கொடுத்திருக்கின்றார். அரசியல்வாதிகளிடம் கையேந்த வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கக் கூடாது என்பது தலைவருடைய சிந்தனையாக இருந்தது.

உண்மையாக போராளிகளை நேசிக்கின்றவர்களும் தமிழ் தேசியத்தை நேசிக்கின்றவர்களும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நாங்கள் தொடர்ச்சியாக வரவேற்போம். ஆனால் இவர்களைப் போன்று கீழ்த்தரமாக போராளிகளை சித்தரிப்பது, அவர்களது பலவீனமான நிலைப்பாடுகளை வெளியிலேயே காட்டுவது, போராளிகளுக்கு மதிப்பளிக்காது அவர்களை கொச்சைப்படுத்துவது போன்ற விடயங்களை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என்றார்.

## இலங்கையின் பலருக்கு பாதிப்பை ஏற்படுத்திய கண்சொட்டு மருந்து குறித்து இந்தியாவின் மருந்து தரஅமைப்பு விசாரணை

இலங்கையில் 30 பேருக்கு கண்பாதிப்பை ஏற்படுத்திய கண்சொட்டு மருந்து குறித்து இந்தியாவின் மருந்து தரகட்டுப்பாட்டு அமைப்பு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. குஜராத்தை சேர்ந்த இன்டியானா ஒப்தல்மிக்ஸ் நிறுவனத்தின் மருந்து குறித்தே விசாரணைகள் இடம்பெறுகின்றன.

ஏப்பிரல் மாதம் இலங்கையின் அரச மருந்துவமனையில் இந்தமருந்தினை பயன்படுத்தியதால் பலரின் கண்பார்வை பாதிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கையின் சுகாதார அமைச்சு இந்த மருந்தினை மீளப்பெற்றிருந்தது.

இந்த கண்மருந்தில் என்ற வகை பக்டீரியா காணப்பட்டதாக சண்டே கார்டியன் செய்திவெளியிட்டிருந்தது. குறிப்பிட்ட நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களிற்கு இழப்பீடு வழங்கவேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்திருந்தது. இந்திய அதிகாரிகள் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டும் என இலங்கை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என நியுஸ் 18 செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து இலங்கைஇறக்குமதி செய்த கண்சொட்டு மருந்துகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என எங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது சில நோயாளிகளிற்கு பக்டீரியா பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18க்கு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 35க்கும் அதிகம் என எங்களிற்கு தெரிவித்துள்ளனர் இலங்கை அமைச்சரவையிலும் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது என இந்திய அரசாங்க அதிகாரியொருவர் நியுஸ் 18க்கு தெரிவித்திருந்தார்.

அரசமருத்துவமனை அதிகாரிகள் அந்த மருந்தினை பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர் முடிவிற்காக காத்திருக்கின்றனர் என அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த கண்சொட்டுமருந்தினை மலட்டுத்தன்மை குறித்த சோதனைக்கு உட்படுத்தவேண்டியுள்ளதால் முடிவுகள் வெளியாக மேலும் 15 நாட்கள் தேவைப்படும் எனவும் இந்திய அதிகாரியொருவர் நியுஸ் 18க்கு தெரிவித்துள்ளார்.

## நீண்ட இழுபறிக்கு மத்தியில் யாழ்.– காரைக்கால் பயணிகள் கப்பல் சேவைக்கு அனுமதி

இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனத்துக்கு தென்னிந்தியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவையை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் சேவையை நடத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் - கே.கே.எஸ். இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை ஆரம்பிப்பதில் இழுபறி நீடித்து வருகின்றது.

இந்தியத் தரப்பிலிருந்தே அதற்கான அனுமதிகள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என்று அறியமுடிகின்றது.

இதற்கிடையில் பாண்டிச்சேரியிலிருந்து காங்கேசன் துறைக்கான சரக்குக் கப்பல் சேவையை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் நடத்துவதற்கான அனுமதி ஹேலீஸ் நிறுவனத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

## கஜேந்திரகுமார் எம்.பி தாக்கப்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் மனித உரிமைகள் ஆணைக்குழு

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று வெள்ளிக்கிழமை வடமராட்சி பகுதிக்கு மக்கள் சந்திப்புக்காக சென்ற வேளை புலனாய்வாளர் ஒருவரால் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், அவ்விடத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியை காட்டி மிரட்டியதாகவும் தொலைபேசி மூலமாக முறையிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடனடியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களிடம் எழுத்து மூலமாக முறைப்பாடு ஒன்றினை நாளைய தினம் வழங்குமாறும், அவ்வாறு வழங்கிய பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.